# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்**: 47/மா/2025
**நாள்**:09.**01.2026**

| | | |
|---|---|---|
| இரா. செந்தில்குமார்<br>சென்னை | --- | முறையீட்டு மனுதாரர் |
| மண்டல அலுவலர்<br>மண்டலம்–9<br>பெருநகர சென்னை மாநகராட்சி | --- | எதிர்மனுதாரர் |

சென்னை–600 024, கோடம்பாக்கம், புலியூர்புரம், பஜனைக் கோவில் தெரு, கதவு எண் 30/57 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. இரா. செந்தில்குமார் என்பவரின் 09.12.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 09.12.2024 அன்று பெறப்பட்டு 47/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

சென்னை–600 024, கோடம்பாக்கம், புலியூர்புரம், பஜனைக் கோவில் தெரு, கதவு எண் 30/57 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. இரா. செந்தில்குமார் என்பவர் தனது 09.12.2024 நாளிட்ட மனுவுடன் அனுப்பியுள்ள ஆவணத்தில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அனுப்பியுள்ள 22.08.2022 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

> “மேற்கண்ட முகவரியில் வசிக்கும் நான் சமூக ஆர்வலர். பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–9–ல் உள்ள அதிகாரிகளுக்கு பலமுறை சிவசக்தி மருத்துவமனை விதி மீறிய கட்டிட கட்டிடத்தின் பற்றி விவரங்களை புகார் மனு அனுப்பியும் பொது தகவல் அதிகாரிகளுக்கு தகவல் கேட்டும் கடந்த ஆண்டில் இருந்த 16 மாதங்கள் ஆகியும் இதுநாள் வரை நடவடிக்கை இல்லை. நான் மண்டலம் 9–ல் உள்ள உதவி ஆணையர் செயற்பொறியாளர், உதவி பொறியாளர் இவர்களிடம் முறையிட்டுப் பார்த்தேன். எந்த ஒரு பயனும் இல்லை. இருப்பினும் CMDA-விடம் பொது தகவல் அதிகாரிகளிடம் கேட்டும் மருத்துவமனைக்கு திட்ட அனுமதி எதுவும் வழங்கப்படவில்லை. தகவலின் நகலை தங்களுக்கு கடந்த 2022 ஆம் ஆண்டு ஜுன் மாதம் அனுப்பியுள்ளேன். அதன் பிறகு தகவல் பெறும் உரிமை சட்டத்தின் மூலமாக பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–9ல் கட்டிடம் கட்ட உரிமையாளர்கள் வரைபடம் ஏதேனும் கொடுத்தார்களா என்று கேட்ட கேள்விக்கும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ல் கேட்டதற்கு

எங்களிடம் வரைபடம் ஏதும் கிடையாது என்று அறிவித்துவிட்டார்கள். இருப்பினும் விதி மீறி கட்டிய கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுத்து சீல் வைக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் மண்டலம் 9–ல் உள்ள அதிகாரிகள் மூலமாக நடவடிக்கை எடுக்கவில்லையெனில் சட்டப்படி நீதிமன்றம் சென்று வழக்கை தொடர்ந்து மண்டல அதிகாரிகள் உதவி ஆணையாளர், செயற்பொறியாளர், உதவி பொறியாளர் அதிகாரிகள் அனைவரின் மீதும் பொது நல வழக்கை சட்டப்படி தொடர்ந்து அக்கட்டிடத்தை சீல் வைத்து இடிக்கும்படி நீதிமன்றத்தின் மூலமாக ஆணையை பெற இருக்கிறேன். இப்புகார் மூலமாக CMDA கொடுத்த தகவலின் அடிப்படையில் அதன் நகல் இணைத்துள்ளேன். மண்டலம் 9ல் கையூட்டு பெற்றுக் கொண்டு கட்டிடத்தை இடிக்காமல் சீல் வைக்காமல் பணிபுரிகிறார்கள். பெருநகர சென்னை மாநகராட்சி பொறுப்பில் இருக்கும் மண்டலம் 9ல் கொடுத்த வரைபடம் ஏதும் கிடையாது என்ற தகவல் உரிமை பெறும் சட்டத்தின் அடிப்படையில் தாங்கள் எங்களுக்கு கொடுத்து நகல் இப்புகாருடன் இணைத்துள்ளேன் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியிடம் கொடுத்த புகாரின் நகல் இணைத்துள்ளேன்.

அதிகாரிகள் அனைவரின் மீதும் பொது நல வழக்கை சட்டப்படி தொடர்ந்து அக்கட்டிடத்தை இடித்து சீல் வைக்க நீதிமன்றத்தின் மூலமாக ஆணையை பெறவிருக்கிறேன். இப்புகார் மூலமாக CMDA கொடுத்த தகவலின் அடிப்படையில் நகல் இணைத்துள்ளேன். அதன் பிறகு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ன் மூலமாக தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் வாயிலாக வரைபடம் ஏதேனும் அளித்துள்ளீர்களா என்ற தகவல் கேட்டதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ல் இருந்த கட்டிடத்தின் வரைப்படம் ஏதும் அளிக்கப்படவில்லை என்று கூறிய நகல் இத்துடன் இணைத்துள்ளேன். மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் அம்மாவிடம் கொடுத்த புகார் நகல் பெருநகர சென்னை மாநகராட்சியின் உயர்திரு. ஆணையரிடம் கொடுத்த புகார் மனுவின் நகல் அனைத்தும் இணைத்துள்ளேன். ஆகவே இது சம்பந்தமாக சென்னை மேயர் அம்மாவையும், உயர்திரு. சென்னை மாநகராட்சி ஆணையரையும் நேரில் சென்று புகார் அளிக்க உள்ளேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 20.02.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி ஆணையர் 06.08.2025 நாளிட்ட தனது கடிதம் எண் ம.அ.9 ந.க. எண் 05790/2024–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்: அதில்–

''கதவு எண் 7, வெங்கடேஸ்வர லேன், அண்ணா நெடும்பாதை, சூளைமேடு, சென்னை–94 என்ற முகவரியில் உள்ள கேள்விக்குரிய கட்டிடத்திற்கு 31.07.2025 அன்று களஆய்வு செய்யப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து 01.08.2025 தேதியில் கட்டிடத்தின் உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 85ன் படி ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு தாக்கீது வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இக்கட்டிடத்தின் உரிமையாளர் 05.08.2025 அன்று அளித்த கடிதத்தில் தங்களது கட்டிடம் 1995ல் கட்டப்பட்டதாகவும், இந்த கட்டிடத்தை மறுசீரமைப்பு செய்து மருத்துவமனையாக பயன்படுத்தி அதற்கு கட்டிட வரைபடம் வரன்முறை செய்ய 25.04.2022ல் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தில் பிரிவு 113C–ன் கீழ் மனு செய்துள்ளார். மேலும், தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 113C கட்டிடம்

வரன்முறைபடுத்துதல் மேதகு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. கட்டிட உரிமையாளர் தங்களது மருத்துவமனைக்கு வரும் வாகனங்களை நிறுத்த கட்டிடத்தின் எதிரே தனக்கு சொந்தமான 1200 சதுர அடி திறந்த வெளி நிலம் ஒதுக்கி உள்ளார் என்று இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவம் இப்பதிலை ஏற்றுக் கொள்ளுமாறு தங்களை பணிந்து கேட்டுக் கொள்ளப்படுகிறது.'' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 07.08.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 24.07.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 07.08.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

''மேற்கண்ட முகவரியில் வசிக்கும் நான் சமூக ஆர்வலர். கதவு எண்.7, வெங்கடேஷ்வரா தெரு, சூளைமேடு, சென்னை–94 என்ற முகவரியில் சிவசக்தி மருத்துவமனை Parking வசதி இல்லாமலும் கட்டிடத்தை சுற்றி நான்குபுறம் இடைவெளி இல்லாமலும் குறுகிய சாலையில் பல ஆயிரம் சதுரடியில் சுமார் நான்கு தளத்திற்கு மேல் சிவசக்தி மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. இந்த மருத்துவமனையில் Parking வசதி இல்லாததால் இங்கு வரும் வாடிக்கையாளர்கள் சாலையில் வாகனங்களை நிறுத்துவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டும் குடிநீர் வாகனங்கள் 108 Ambulance செல்வதற்கும் தடையாக உள்ளது. இதற்கான புகைப்பட நகலினை இம்முறை மன்ற நடுவர்முன் சமர்ப்பிக்கிறேன். இக்கட்டிடத்திற்கு வழங்கிய வரைப்படம் NOC கேட்டு மனு அளிக்கப்பட்டது. 11.08.2021 அன்று CMDA–லிருந்து எவ்வித அனுமதியும் பெறப்படவில்லை. இடைவெளி இல்லாமல் கட்டப்பட்டுள்ளதால் இரண்டு மூன்று முறை தீவிபத்து ஏற்பட்டுள்ளது. எனவே இவ்வணிக வளாகக் கட்டிடத்தை லாக் & சீல் செய்து இடிக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் வேண்டுகிறேன்.''

6. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு 07.08.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

''மனுதாரர் குறிப்பிட்ட கட்டிடத்திற்கு 1975ஆம் வருடம் சென்னை மாநகராட்சியால் வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2021வருடம் ஆகஸ்ட் மாதம் ஆவணங்கள் கோரி கட்டிட உரிமையாளருக்கு தாக்கீது வழங்கப்பட்டது.

31.07.2025 அன்று கள ஆய்வு செய்யப்பட்டு 01.08.2025 தேதியில் கட்டிடத்தின் உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 85–இன்படி ஆவணங்கள் சமர்ப்பிக்குமாறு தாக்கீது வழங்கப்பட்டது. கட்டிடத்தின் உரிமையாளர் 05.08.2025 நாளிட்ட தனது கடிதத்தில் தங்களது கட்டிடம் 1995–இல் கட்டப்பட்டதாகவும், கட்டிடத்தை மறுசீரமைப்பு செய்து மருத்துவ மனையாக பயன்படுத்தி அதற்கு கட்டிட வரைபடம் வரன்முறை செய்ய 25.04.2022–இல் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தில்

பிரிவு 113C–இன் கீழ் மனு செய்துள்ளதாகவும், மேலும் இக்கட்டிட உரிமையாளர் வரன்முறைபடுத்துதல் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இதன் விவரத்தை முறைமன்ற நடுவத்திற்கு விரைவில் சமர்ப்பிக்கிறோம் என்பதை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

மனுதாரர் 25.04.2022ல் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தில் பிரிவு 113C–இன்கீழ் மனு செய்துள்ளபடியால் மேற்படி குழுமத்திற்கு தற்போதைய நிலை என்னவென்று கேட்டறிந்து அதன் அடிப்படையில் மாநகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இம்முறை மன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறோம்.''

7. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9–ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் தங்களது வாக்குமூலத்தில், கட்டிட உரிமையாளர், தனது கட்டிட வரைபடம் வரன்முறை செய்ய சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் பிரிவு 113C–ன் கீழ் மனு செய்துள்ளதாகவும், மேலும் வரன்முறைப்படுத்துதல் தொடர்பாக மாண்பமை உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாக தெரிவித்துள்ளதை தொடர்ந்து, இது குறித்து சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடம் 01.12.2025 மற்றும் 16.12.2025 நாளிட்ட முறையீட்டு மனு கடிதத்தில் அறிக்கை கோரப்பட்டது.

8. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலாளர் தனது 23.12.2025 நாளிட்ட கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:–

''திருமதி R.D. ராஜேஸ்வரி அவர்கள் இணைய வழி (online) மூலம் மனை எண் 14, கதவு எண்.7,வெங்கடேஸ்வரா லேன், அண்ணா நெடும்பதை, சூளைமேடு, சென்னை–600 094–ல் உள்ள கட்டிடத்தை வரன்முறைப்படுத்த ரசீது எண் CMDA/Reg.113C/2637/2022, நாள் 29.04.2022 மூலம் விண்ணப்பித்துள்ளார்.

விண்ணப்பதாரர் 28.02.2023 தேதியிட்ட கடிதத்தில் இணைப்பு I படிவம்–A, இணைப்பு I–க்கான இணைப்பு (இணைப்பு– III) கட்டிடத்தின் முன்மொழியப்பட்ட ஒழுங்கு முறைப்படுத்தலின் பழுதுபார்ப்பு/மறுசீரமைப்புக்கான கட்டமைப்பு வடிவமைப்பு அடிப்படை அறிக்கை, இணைப்பு V, இணைப்பு VI, சட்டக் கருத்து, ஒப்பந்தம் சமர்ப்பித்துள்ளார்.

மேலும், வரன்முறைப்படுத்தும் திட்டம் 113C மூலம் பெறப்பட்ட மனுக்களின் மீது திரு. வி.பி.ஆர் மேனன் அவர்கள் தொடர்ந்த வழக்கு எண்.23889/2017–ல் மாண்புமிகு உயர்நீதி மன்றம், 03.07.2023 அன்று பிறப்பித்த ஆணையில் இத்திட்டத்தை எதிர்த்து தொடரப்பட்ட நீதிபேராணை எண்.25184/2015, போன்ற வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் நாள் 03.07.2023 தேதியிட்ட உத்தரவில் அரசாணை எண் 110 & 111, நாள் 22.06.2017–ஐ நீதிமன்றத்தின் வேறொரு பிரிவு ரத்து செய்ததை உறுதி செய்து ஆணையிட்டது.

இதனை எதிர்த்து இவ்வலுவலகத்தால் தொடரப்பட்ட மேல்முறையீட்டு மனு மீதான வழக்கு மாண்புமிகு உச்சநீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளது. மாண்புமிகு உச்சநீதி மன்றத்தில் பிறப்பிக்கப்படும் உத்தரவை பின்பற்றி 113C பிரிவின் கீழ் சேர்க்கப்பட்ட அனைத்து விண்ணப்பங்களின் மீதும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.''

9. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9–ன் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின்,

உறுப்பினர்–செயலரின் கடிதம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

கதவு எண்.7, வெங்கடேஷ்வரா தெரு, சூளைமேடு, சென்னை–94 என்ற முகவரியில் சிவசக்தி மருத்துவமனை Parking வசதி இல்லாமலும் கட்டிடத்தை சுற்றி நான்குபுறம் இடைவெளி இல்லாமலும் குறுகிய சாலையில் பல ஆயிரம் சதுரடியில் சுமார் நான்கு தளத்திற்கு மேல் சிவசக்தி மருத்துவமனை செயல்பட்டு வருகிறது என்பதும், இந்த மருத்துவமனையில் Parking வசதி இல்லாததால் இங்கு வரும் வாடிக்கையாளர்கள் சாலையில் வாகனங்களை நிறுத்துவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது என்பதும், CMDA–லிருந்து எவ்வித அனுமதியும் பெறப்படவில்லை என்பதும், இடைவெளி இல்லாமல் கட்டப்பட்டுள்ளதால் இரண்டு மூன்று முறை தீவிபத்து ஏற்பட்டுள்ளது என்பதும், எனவே இவ்வணிக வளாகக் கட்டிடத்தை லாக் & சீல் செய்து இடிக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருப்பது மனுதாரர் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் மனுவில் குறிப்பிட்ட சிவசக்தி மருத்துவமனை கட்டிடத்திற்கு 1975ஆம் வருடம் சென்னை மாநகராட்சியால் வரைபட அனுமதி வழங்கப்பட்டது என்பதும், 2021வருடம் ஆகஸ்ட் மாதம் ஆவணங்கள் கோரி கட்டிட உரிமையாளருக்கு தாக்கீது வழங்கப்பட்டது என்பதும், 31.07.2025 அன்று கள ஆய்வு செய்யப்பட்டு 01.08.2025 தேதியில் கட்டிடத்தின் உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 85–இன்படி ஆவணங்கள் சமர்ப்பிக்குமாறு தாக்கீது வழங்கப்பட்டது என்பதும், கட்டிடத்தின் உரிமையாளர் 05.08.2025 நாளிட்ட தனது கடிதத்தில் தங்களது கட்டிடம் 1995–இல் கட்டப்பட்டதாகவும், கட்டிடத்தை மறுசீரமைப்பு செய்து மருத்துவ மனையாக பயன்படுத்தி அதற்கு கட்டிட வரைபடம் வரன்முறை செய்ய 25.04.2022–இல் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தில் பிரிவு 113 C–இன்கீழ் மனு செய்துள்ளதாகவும், கட்டிடங்கள் வரன்முறைப்படுத்துதல் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்பதும், இதன் விவரத்தை முறைமன்ற நடுவத்திற்கு விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்பதும், மனுதாரர் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தில் பிரிவு 113C–இன்கீழ் மனு செய்துள்ளபடியால் மேற்படி குழுமத்திற்கு தற்போதைய நிலை என்னவென்று கேட்டறிந்து அதன் அடிப்படையில் மாநகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் உதவிப் செயற்பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மேலும், வரன்முறைத் திட்டம் 113C மூலம் பெறப்பட்ட மனுக்கள் தொடர்பாக, மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 03.07.2023 தேதியிட்ட உத்தரவில் அரசாணை எண் 110 & 111, நாள் 22.06.2017–ஐ ரத்து செய்ததை உறுதி செய்ததை தொடர்ந்து, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் மாண்பமை உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது என்பது சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர்–செயலாளரின் கடிதத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், கதவு எண்.7, வெங்கடேஷ்வரா தெரு, சூளைமேடு, சென்னை–94 என்ற முகவரியில் உள்ள நான்கு தளம் கொண்ட சிவசக்தி மருத்துவமனையின் உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 85–இன்படி ஆவணங்கள் சமர்ப்பிக்குமாறு தாக்கீது அளித்ததின் அடிப்படையில், அம்மருத்துவமனையின் உரிமையாளர், அக்கட்டிடத்தை

சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தில், பிரிவு 113C–இன்கீழ் வரன்முறைப்படுத்துதல் தொடர்பாக மனு அளித்துள்ள நிலையில், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர்–செயலாளர் தனது 23.12.2025 நாளிட்ட கடிதத்தில் கட்டிடங்களை வரன்முறைத்தும் திட்டம் தொடர்பாக மாண்பமை உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது என்பதும், மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் பிறப்பிக்கப்படும் உத்தரவை பின்பற்றி 113C பிரிவின்கீழ் சேர்க்கப்பட்ட அனைத்து விண்ணப்பங்களின் மீது மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் மேல்நடவடிக்கை எடுக்க அவசியம் எழவில்லை என்று முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 09–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. இரா. செந்தில்குமார்,
கதவு எண் 30/57, பஜனைக் கோவில் தெரு,
புலியூர்புரம், கோடம்பாக்கம்,
எண்.147 ஆற்காடு ரோடு, சென்னை–600 024.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(3) உதவி ஆணையர்,
மண்டலம் 9,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 1, லேக் ஏரியா, 4வது குறுக்குத் தெரு,
நுங்கம்பாக்கம்,
சென்னை–600 034.

(4) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

13/1/26
செயலாளர்

13.1.26

1/10

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032